**PONDICHERRY UNIVERSITY**
**PUBLIC RELATIONS WING**

**NEWS PAPER CLIPPINGS**

DINAKARAN DATED 13.05.2025

# ஹெலிபேட் மைதானத்தில் தூய்மை பணி

புதுச்சேரி, ஏப். 13: புதுச்சேரி லாஸ்பேட்டையில் உள்ள புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் சமுதாயக் கல்லூரியின் இரண்டாம் ஆண்டு மாணவர்கள், புதிய கல்வி கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாடத்திட்டத்தின் கீழ் “சமுதாய ஈடுபாடு” திட்டத்தின் ஒரு பகுதியாக, நேற்று முன்தினம் உழவர்கரை நகராட்சியுடன் இணைந்து ஹெலிபேட் மைதானத்தை சுத்தம் செய்தனர்.

இதில் உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ் ராஜ், சுகாதார அதிகாரி டாக்டர் ராஜா, உதவி பொறியாளர் ஜெயசங்கர் ஆகியோர் பணியைத் தொடங்கி வைத்தனர். மாணவர்கள் மைதானத்தைச் சுற்றியுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றினர்.

சுத்தப்படுத்துதல் பணிகளுடன், மக்களுக்கு சுத்தம் மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விழிப்புணர்வையும் மாணவர்கள் ஏற்படுத்தினர்.

இதில் முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன், பேராசிரியர்களான சுஜரிதா, இந்துமதி, வசந்தா கோகிலம், பாண்டு மற்றும் நிர்வாக பணியாளர் செல்வம் ஆகியோர் ஒருங்கிணைத்தனர். இப்பணியில் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் சுமார் 50க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



▶ லாஸ்பேட்டை ஹெலிபேட் மைதானத்தில் தூய்மை பணி நடந்தது.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAMALAR DATED 13.05.2025



• புதுவை மத்திய பல்கலை. நூலகத்தை பரவலாக்க ஒரே நாடு ஒரே சந்தா திட்டம் தொடங்கப்பட்டது.

## புதுவை மத்திய பல்கலை. நூலகத்தை பரவலாக்க ஒரே நாடு ஒரே சந்தா திட்டம்

புதுச்சேரி

புதுவை மத்திய பல்கலைக்கழகத்தின் ஆனந்தரங்கப்பிள்ளை நூலகத்தை பரவலாக்கம் செய்யும் நோக்கில் ஒரே நாடு ஒரே சந்தா அணுகல் முறையை க்யூ ஆர் குறியீடுகள் மூலம் தொடங்கப்பட்டுள்ளது. இதனை துணைவேந்தர் பிரகாஷ்பாபு தொடங்கி வைத்தார். கணினி அறிவியல் துறைத் தலைவர் ஜெயக்குமார், நூலகர் விஜயகுமார், கலாச்சார உறவுகள் துறை இயக்குநர் கிளமெண்ட் லூர்து உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதுதொடர்பாக பல்கலைக்கழக தரப்பில் கூறுகையில், "இந்தச் முயற்சி, புதுவை பல்கலைக்கழகத்தின் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், கற்பித்தல் ஆசிரியர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு கல்வி மற்றும் ஆராய்ச்சி வளங்களை ஜனநாயகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது " என்றனர்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

MAALAI MALAR DATED 13.05.2025




### ஒரே நாடு ஒரே சந்தா திட்டத்துக்கு

# புதுவை பல்கலையில் கியூ.ஆர். கோடு

## துணைவேந்தர் வெளியிட்டார்

புதுச்சேரி, மே.13—

புதுவை பல்கலைக் கழகத்தின் ஆனந்தரங்கப் பிள்ளை நூலகத்தை பரவலாக்கம் செய்ய ஒரே நாடு, ஒரே சந்தா திட்டத்துக்கு கியூ. ஆர். கோடு அறிவிக்கப் பட்டுள்ளது.

கணினி அறிவியல் துறை தலைவர் ஜெயக்குமார் வரவேற்றார். பல்கலைக் கழக நூலகர் விஜயகுமார் ஒருங்கிணைத்தார். துணைவேந்தர் பிரகாஷ் பாபு தொடங்கி வைத்தார். கலாச்சார உறவுகள் துறை இயக்குனர் கிளமென்ட் லூர்து சிறப்புரையாற்றி னார். பல்கலைக்கழக வளாகம் முழுவதும் கியூ. ஆர். கோடு காட்சிப்படுத் தப்பட்டுள்ளன.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAKARAN DATED 13.05.2025

புதுவை பல்கலைக்கழக நூலகத்தில்

## ஒரே நாடு, ஒரே சந்தா திட்ட கியூஆர் குறியீடு வெளியீடு



புதுவை பல்கலைக்கழக நூலகத்தில் ஒரே நாடு, ஒரே சந்தா திட்ட கியூஆர் குறியீடு வெளியிடப்பட்டது.

புதுச்சேரி, மே 13: புதுவைப் பல்கலைக்கழகத்தின் ஆனந்தரங்கபிள்ளை நூலகத்தை பரவலாக்கம் செய்யும் வகையில் ஒரே நாடு, ஒரே சந்தா திட்டம் கியூ ஆர் குறியீடுகள் மூலம் திறக்கப்பட்டுள்ளது. கணினி அறிவியல் துறைத் தலைவர் ஜெயகுமார் வரவேற்றார். இந்த நிகழ்ச்சிகளை பல்கலைக் கழகத்தின் நூலகர் விஜயகுமார் ஒருங்கிணைத்தார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பிரகாஷ் பாபு நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசுகையில், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கல்வி உள்ளடக்கத்தை தடையின்றி அணுகும் வகையில், ஒரே நாடு ஒரே சந்தா திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. பரந்த அளவிலான மின்னணு வளங்களை, பல்கலைக்கழகத்தினர் எளிதாக அறிவதற்கும் ஆராய்வதற்கும் கியூஆர் குறியீடு அணுகல் முறை மிகுந்த நன்மைகளை வழங்கும் என்றார்.

கலாசாரம் மற்றும் கலாசார உறவுகள் துறை இயக்குநர் கிளமெண்ட் லூர்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, ஆராய்ச்சி மற்றும் திறந்த அறிவுக் கலாசாரத்தை வளர்ப்பது குறித்த செறிவுமிக்க கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார். பல்கலைக்கழக வளாகம் முழுவதும் அதிகாரப்பூர்வ கியூ ஆர் குறியீடுகள் காட்சிப்படுத்தப்பட்டன. இக்குறியீடுகள் டிஜிட்டல் உள்ளடக்கத்துக்கு உடனடி அணுகலை அனுமதிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சி, புதுவைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி, கற்பித்தல் மற்றும் கற்றலுக்கு கணிசமாக ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

THILAI MALAI DATED 13.05.2025

RNI No. PONBIL/2021/82208
Email: thillaimaildaily@gmail.com
THILLAI MAIL
தில்லை மெயில்
மலர் : 4 இதழ் : 330
VOLUME: 4 ISSUE: 330
தினசரி காலை நாளிதழ்
4 பக்கம் ரூ.500 காசு
புதுச்சேரி (13-5-2025) செவ்வாய்க்கிழமை
PUDUCHERRY(13-5-2025) TUESDAY
செய்திக்கு:94426 34795

# புதிய தேசிய கல்வி கொள்கையின்படி பாண்டிச்சேரி பல்கலைக்கழக வரலாற்று துறை மாணவர்கள்

## சென்னை நிறுவனங்களில் களப்பணியில் ஈடுபட்டனர்



புதுச்சேரி, மே 13–

பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் புதிய தேசிய கல்வி கொள்கையை அமல்படுத்தியுள்ளது. அதன்படி பல்கலைக்கழக வரலாற்று பாடத்தின் முதலாமாண்டு மாணவர்கள் சென்னையில் உள்ள 2 புகழ்பெற்ற பாரம்பரிய நிறுவனங்களில் உருமாற்றக் களப்பணியில் ஈடுபட்டனர்.

ஆர்வம், புலமை மற்றும் பாரம்பரியத்தின் கொண்டாட்டமாக, புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் வரலாறு மற்றும் கல்வித் துறைகளைச் சேர்ந்த மாணவர்கள், நாட்டின் மிகவும் மதிப்புமிக்க பாரம்பரிய நிறுவனங்களில் இரண்டான சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் சி.பி. ராமசாமி அய்யர் அறக்கட்டளையில் கடந்த மே 10ம் தேதி ஒரு மைல்கல் களப்பணி திட்டத்தை நிறைவு செய்தனர். இது இந்தியாவிலேயே முதன்மையானது.

இந்த சவாலான பாடத்திட்டத்தின் போது, மாணவர்கள் வகுப்பறைகளுக்குப் பதிலாக வரலாறு, அருங்காட்சியகங்கள் மற்றும் தொல்லியல் துறைகளில் காப்பாளர்கள், காப்பக வல்லுநர்கள், பாதுகாப்பு விஞ்ஞானிகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களுடன் உரையாடினர். கண்காட்சிகளை ஆய்வு செய்தல், பல நூற்றாண்டுகள் பழமையான கையெழுத்துப் பிரதிகளைப் பதிவு செய்தல், வாய்மொழி வரலாறுகளை திட்டமிட்டு செயல்படுத்துதல், வரலாறு, அருங்காட்சியகம் மற்றும் தொல்லியல் பற்றிய அறிவை புத்தகங்களிலிருந்து மட்டுமல்ல, அது கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் மற்றும் ஆதாரங்களிலிருந்தும் பெறுவதன் மூலம் அவர்கள் கடந்த காலத்தின் உயிருள்ள கட்டமைப்பில் தங்களை மூழ்கடித்துக் கொள்ள செய்யப்பட்டனர்.

பாண்டிச்சேரி பல்கலைக்கழக வரலாற்றுத் துறையின் உதவிப் பேராசிரியரான ருமன் பானர்ஜி மற்றும் விருந்தினர் உதவிப் பேராசிரியர் ஆர்த்தி பாஸ்கரன் ஆகியோர் இந்த வகையான அனுபவத்தின் முக்கிய தன்மையை வலியுறுத்தினர்.

பல்கலைக்கழகத் தலைமை இந்த முயற்சியைப் பாராட்டியதுடன், கல்வித்துறையையும் பொது ஈடுபாட்டையும் இணைக்கும் ஒரு "புரட்சிகர மாதிரி" என்றும் அழைத்தது. களப்பணி இப்போது தேசிய கல்வி கொள்கை பாடத்திட்டத்தின் ஒரு வழக்கமான அம்சமாக உள்ளது, இது புதுமையான மற்றும் ஆழமான கல்விக்கான பல்கலைக்கழகத்தின் நற்பெயரை மேலும் வலுப்படுத்துகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

NAMADHU MURASU DATED 13.05.2025

# ஒரே நாடு, ஒரே சந்தா திட்டத்துக்கு கியூ.ஆர்.கோடு வெளியீடு

**புதுச்சேரி, மே 13–**

புதுவை பல்கலைக்கழகத்தின் ஆனந்தரங்கப்பிள்ளை நூலகத்தை பரவலாக்கம் செய்ய ஒரே நாடு, ஒரே சந்தா திட்ட கியூ.ஆர். கோடு திறக்கப் பட்டுள்ளது.

கணினி அறிவியல் துறை தலைவர் ஜெயக்குமார் வரவேற்றார். பல்கலைக்கழக நூலகர் விஜயகுமார் ஒருங் கிணைத்தார். துணைவேந்தர் பிரகாஷ்பாபு தொடங்கி வைத்தார்.

கலாச்சார உறவுகள் துறை இயக்குனர் கிளமென்ட் லூர்து சிறப்புரையாற்றினார். பல்கலைக்கழக வளாகம் முழுவதும் கியூ.ஆர். கோடு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAMALAR DATED 13.05.2025

# லாஸ்பேட்டை மைதானத்தில் துப்புரவு பணி சமுதாய கல்லூரி மாணவர்கள் பங்கேற்பு

**புதுச்சேரி, ஏப். 13–**

லாஸ்பேட்டை ஹெலிபேடு மைதானத்தில் தீவிர துப்புரவு பணி நடந்தது.

பெஞ்சல் புயலின் போது ஏராளமான மரங்கள் லாஸ்பேட்டை ஹெலிபேடு மைதானம் மற்றும் அதனை சுற்றிலுள்ள பகுதிகளில் முறிந்து விழுந்த நிலையில், அப்பகுதியில் மீண்டும் பசுமையை ஏற்படுத்த தினமலர் நாளிதழ் முயற்சி எடுத்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, ஹெலிபேடு மைதானத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மரக்கன்று நடும் திட்டத்தையொட்டி ஹெலிபேடு மைதானம் முழுதும் தீவிர துப்புரவு பணியும் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து பல்வேறு கல்லூரி நிறுவனங்கள் கரம் கோர்த்து துாய்மை பணியில் ஹெலிபேடு மைதானத்தில் தீவிர துப்புரவு பணியில் ஈடுபட்டு வருகின்றன. அந்த வகையில், தினமலர் நாளிதழ், புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லுாரி, உழவர்கரை நகராட்சி சார்பில், நேற்று தீவிர துப்புரவு பணி நடந்தது.



சமுதாயக் கல்லுாரி மாணவர்கள் மற்றும் உழவர்கரை நகராட்சி ஊழியர்கள் இணைந்து லாஸ்பேட்டை ஸ்கேட்டிங் மைதானத்தைச் சுற்றி குவிந்துள்ள குப்பைகளை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

பல்வேறு குழுக்களாக பிரிந்த சமுதாய கல்லுாரி உடற்கல்வித் துறை மாணவர்கள் ஸ்கேட்டிங் மைதானத்தை சுற்றிலும் சிதறி கிடந்த குப்பைகளை சேகரித்து அப்புறப்படுத்தினர்.

கல்லுாரி முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, தீவிர துப்புரவு முகாமை துவக்கி வைத்தார்.

அவர்பேசுகையில், 'இவ்வளவு பெரிய மைதானம் புதுச்சேரியில் இருப்பது நமக்கு பெருமை. இதனை துாய்மையாக வைத்துக் கொள்ளுவது இம்மைதானத்தை பயன்படுத்திக் கொள்ளும் அனைவரது கடமை. இம்மைதானத்தில் பசுமையை மீட்க தினமலர் சார்பில், மரக்கன்றுகள் நட்டு பராமரிப்பது பாராட்டுக்குரியது.

இந்த முயற்சியில் அனைவரும் கரம் கோர்த்து, லாஸ்பேட்டை மைதானத்தில் பசுமை சூழலை மீட்டெடுக்க வேண்டும். சமூக பொறுப்புடனும் குப்பைகளை குப்பை தொட்டியில் போட வேண்டும்' என்றார்.

நிகழ்ச்சியில் உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ் ராஜ் அறிவுறுத்தலின் பேரில், இளநிலை பொறியாளர்கள் சேகர், ஜெய்சங்கர், சுகாதார ஆய்வாளர் பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

DINAMALAR DATED 06.05.2025